பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 16 செவ்வாய்க்கிழமை 02.11.2021 கதிர் 225

## நல்லூரில் கந்தஷஷ்டி உற்சவம் நேரலையில்

வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் ‘பிலவ’ வருட கந்தஷஷ்டி உற்சவம் எதிர்வரும் 05 ஆம் திகதி ஆரம்பமாகி 11 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. சுகாதாரத் துறையினரது அறிவுறுத்தலின் படி பக்தர்கள் வீடுகளில் இருந்து தரிசனம் ☞2

# யாழில் ஒன்று கூடிய தமிழ்க் கட்சிகள் மீள இரு வாரங்களில் சந்திக்க முடிவு



**(கலையமுதன்)**

யாழ்ப்பாணம்,நவம்பர் 02

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் கலந்து கொள்ளக் கூடியதாக தமது கட்சிகளின் அடுத்த சந்திப்பை அடுத்த இருவாரங்களுக்குள் நடத்துவது என இன்று பகல் யாழ்ப்பாணத்தில் கூடிய தமிழ்ப் பேசும் கட்சிகள் முடிவு செய்தன.

இன்று காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியொன்றில் தமிழ் பேசும் கட்சிகளிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த முடிவு எட்டப்பட்டதாக அதன் முடிவில் தெரிவிக்கப்பட்டது. ☞2

# தமிழ் – முஸ்லிம் தரப்புகளின் ஒன்றிணைவு கட்டாயமாகிறது




## யாழ்ப்பாணத்தில் ஹக்கீம் தெரிவிப்பு

**(கலையமுதன்)**

**தமிழ் தரப்புக்களும் முஸ்லிம் தரப்புக்களும் தேர்தல் உட்பட அனைத்து நடவடிக்கைகளிலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் மிக வேகமாக உணரப்பட்டு இருக்கின்றதென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி.தெரிவித்தார்.** ☞2

## கொழும்பு பல்கலை வேந்தராக முருத்தெட்டுவே ஆனந்த தேரர்



கொழும்பு பல்கலைக்கழகத்தின் வேந்தராக வணக்கத்திற்குரிய முருத்தெட்டுவே ஆனந்த தேரர் நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நவம்பர் மாதம் 17 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் ☞2

## ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாட்டில் யாழில் கவனவீர்ப்புப் போராட்டம்



**(ந.லோகதயாளன்)**

விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கால்நடை தீவன விலை ஏற்றம் என்பவற்றைக் கண்டித்து ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினரின் ஏற்பாட்டில் ☞2

## மின் ஊழியர்கள் நாளை ஆர்ப்பாட்டம் மாத்திரமே

### வேலைநிறுத்தம் இல்லையாம்

நாளை தாம் நடத்துவது வேலைநிறுத்தமல்ல எனவும், ஆர்ப்பாட்டம் மாத்திரமே எனவும் இலங்கை மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது. ☞2

# வடக்கு – கிழக்கு இணைந்த உயர்ந்த பட்ச சமஷ்டி அலகு

## இந்தியாவை வலியுறுத்தக் கோர வேண்டும் என தமிழ்க் கட்சிகளிடம் விக்னேஸ்வரன் யோசனை



‘‘இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்கள் ஒரு தேசம். வடக்கு, கிழக்கு அவர்களின் மரபுவழித் தாயகம். பாரதீனப்படுத்தாத சுயநிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு, இணைந்த வடக்கு, கிழக்கில் உயர்ந்தபட்ச சமஷ்டி அதிகாரக் கட்டமைப்பு ஒன்றின் கீழ் ஏற்படுத்தப்படும் அதிகாரப் பகிர்வே தேசிய இனப் பிரச்சினைக்கான நிலையான தீர்வாகும். சமஷ்டிக் கட்டமைப்பின் கீழ் இத்தகைய ஒரு நிலையான தீர்வினை ☞2

# கீரிமலையில் கடற்படையினருக்கு காணி அளவிடும் முயற்சி முறியடிப்பு



**(கலையமுதன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம்,நவ.02

யாழ். கீரிமலை பகுதியில் கடற்படையினருக்கு காணி அளவிடும் நடவடிக்கை பொதுமக்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களால் முறியடிக்கப்பட்டது. ☞2

### நல்லூரில் ...........

செய்யும் பொருட்டு நல்லூர் கந்த சுவாமி தேவஸ்தானத்தினால் உற்ச வத்தில் இடம்பெறும் நிகழ்வுகள் ஆலய உத்தியோகபூர்வ YouTube தளத்தில் நேரலையாக ஒளிபரப்பப்படவுள்ளன.

ஆகையால் கந்தஷஷ்டி உற்சவ காலத்தில் உற்சவ நேரங்களின் போது நாட்டின் தற்போதைய சுகாதார நடைமுறைகளின்படி பக்தர்கள் ஆலயத்தினுள்ளும் வெளிவளாகத்திலும் ஒன்று கூடுவதைத் தவிர்க்கும் பொருட்டு உற்சவ நேரங்களின் போது ஆலயம் வருவதனை தவிர்த்து வீடுகளில் இருந்து தூர தரிசனம் செய்யுங்கள் என தேவஸ்தானம் கேட்டுக்கொண்டுள்ளது.

Youtube தள முகவரி - https://www.youtube.com/channel/UCmKSl9nBdK-3SRzJEpERINQ/featured

### யாழில் ஒன்று .....

தமிழ் பேசும் மக்களின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்துவரும் அரசியல் தீர்வு என்பது அவர்களின் அரசியல் அபிலாஷைகளைத்திருப்திப்படுத்தக்கூடிய முறையிலேயே அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தும் அதேவேளையில், எமது மக்கள் தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு, பின்வரும் விடயங்கள் உடனடியாக நிறைவேற்றப்படவேண்டும் என்று இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது:-

✦ இந்த நாட்டின் அரசியல் சாசனத்தில் அமைந்திருக்கும் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் அத்துடன் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் விரைவாக நடத்தப்படவேண்டும்.

✦ அரசாங்கத்தினாலும் அரசாங்க ஆதரவுடனும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டமிட்ட காணி அபகரிப்பு நடவடிக்கைகள் அனைத்தும் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

✦ பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு, அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரும் விடுதலை செய்யப்படவேண்டும்.

✦ பல்லின, பல்மொழி, பல்மத மக்கள் வாழும் இந்த நாட்டில் ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாட்டை முன்னெடுப்பதற்கும், நடைமுறைப்படுத்துவதற்குமாக அமைக்கப்பட்டிருக்கும் ஜனாதிபதி செயலணி மக்களுக்கிடையில் ஒற்றுமையின்மையையும், பிரிவினையையும் ஏற்படுத்தக்கூடிய பாரிய ஆபத்தைக் கொண்டிருப்பதால் அதனை திட்டவட்டமாக நிராகரிப்பது. - என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோகணேசன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, தமிழ் மக்கள் கூட்டணியின் பொருளாளர் வி.பி.சிவநாதன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி,தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### மின் ஊழியர்கள் ....

மேலும் நாளை இடம்பெறவுள்ள எதிர்ப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து தங்களது போராட்டம் இடம்பெறும் திகதிகள் அறிவிக்கப்படும் எனவும் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

தேசிய வளங்களை விற்பனை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து எரிபொருள், துறைமுக மற்றும் மின்சார ஒன்றிணைந்த தொழிற்சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் நாளை கொழும்பில் இடம்பெறவுள்ளதாக குறித்த சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

### வடக்கு - கிழக்கு ....

ஏற்படுத்துவதற்கு இந்தியா எல்லாவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ள வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கின்றோம்."

இன்று யாழ் நகரில் நடைபெற்ற பல கட்சிக் கூட்டத்திற்கு தமிழ் மக்கள் கூட்டணித் தலைவரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரனினால் சமர்ப்பிக்கப்பட்ட வரைவு ஆவணத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பதாக அவரது கட்சியின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சுகயீனம் காரணமாக நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் கூட்டத்தில் பங்குபற்ற முடியவில்லை என்றும், அவர் சார்பாக இவ் ஆவணம் பேராசிரியர் சிவநாதனினால் இன்றைய கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

'ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ள தமிழ் தேசிய கட்சிகளின் முடிவு' - என்ற தலைப்பில் அமைந்த அந்த ஆவணத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தவை வருமாறு:-

குறுகிய அரசியல் இலாபம், தூர நோக்கற்ற சிந்தனை மற்றும் கடும் பௌத்த இனவாத சிந்தனை ஆகியவற்றின் அடிப்படையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள் காரணமாக நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள ஆபத்துக்களைக் கவனத்தில் கொண்டும் -

வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள தமிழ் பேசும் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாகவும் -

நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு, சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை தடுப்பதற்கும் -

அரசமைப்பில் ஏற்கனவே இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை அதன் ஆரம்ப நிலையில் இருந்தவாறு முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்தியா காலதாமதம் எதுவும் இன்றி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு மற்றும் அரசியல் பொருளாதார மற்றும் கலாசார அபிலாஷைகளை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவுக்கு இருக்கும் தார்மீக ரீதியான கடமையினையும் பொறுப்பினையும் நாம் வலியுறுத்துவதுடன், அதன் அடிப்படையில் உடனடியாக தலையீட்டை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் பேசும் மக்களின் சார்பாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

தற்போதைய நிலைமையில் மலையக மக்களும், முஸ்லிம் மக்களும் வாழும் இடங்களில் மாகாணசபைகளை உடனே ஏற்படுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றோம். - என்று இருந்தது.

இந்தியாவிடம் கோரிக்கை விடுக்கும் கடிதம் இதுவரையில் தயாரிக்கப்படவில்லை. கொழும்பில் இம்மாதம் 8 ஆம் திகதி பல கட்சிக் கூட்டம் நடைபெறும் போது இது கவனத்திற்கு எடுக்கப்படும் என்றும் அக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

### தமிழ் - முஸ்லிம் .......

இன்று யாழ்ப்பாணம் தனியார் விடுதி ஒன்றில் தமிழ் பேசும் கட்சிகளின் கலந்துரையாடலுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்றைய சந்திப்பு ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் என்னிடமும் மனோகணேசனிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.- என்றார்.

தமிழரசுக் கட்சி இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்காமை தொடர்பாக ஊடகங்கள் கேள்வியெழுப்பிய போது -

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக ஏற்கனவே தமிழரசுக் கட்சியுடனும், ஏனைய கட்சிகளுடன் பேச்சுகள் நடந்திருக்கின்றன, அடையாள ரீதியாக நாம் இன்று சந்தித்தாலும் எதிர்வரும் காலங்களில் நாங்கள் சந்தித்து இதனை முன்கொண்டு செல்வதற்கு தீர்மானித்துள்ளோம்

தமிழ்த்தரப்புக்களும் முஸ்லிம் தரப்புக்களும் தேர்தல் உட்பட அனைத்து நடவடிக்கையிலும் ஒன்றிணைந்து செயற்பட சாத்தியப்பாடுகள் இருக்கின்றன. அனைத்திலும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான அவசியம் மிக வேகமாக உணரப்பட்டு இருக்கின்றது. - என்றார் ஹக்கீம்.

### கொழும்பு பல்கலை ....

வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் சமயங்களில் மொட்டுக் கட்சிக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கைக்கொண்ட முருத்தெட்டுவே ஆனந்த தேரர் அண்மைக் காலத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும் அவரது அரசையும் கடுமையாக விமர்சித்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

### கீரிமலையில் ....

காணி உரிமையாளரின் ஒப்புதல் இல்லாமல் கீரிமலை நகுலேஸ்வரம், ஜே/226 கிராம சேவகர் பிரிவில் காணிகளை சுவீகரிப்பதற்கான அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முயற்சி ஒன்று நில அளவை திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டிருந்தது.

இருப்பினும் இன்று காலை அங்கு ஒன்றுகூடிய காணி உரிமையாளர்கள், அரசியல் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, காணி அளவீட்டு நடவடிக்கைகளைத் தற்காலிகமாக கைவிட்டுச் செல்கின்றோம் எனக் கூறிவிட்டு நில அளவைத் திணைக்களத்தினர் அவ்விடத்தில் இருந்து அகன்றனர்.

### ஐக்கிய மக்கள் ....

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகக் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று இன்று காலை இடம்பெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் பிரபாகரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் போராட்டத்தில் வலி. வடக்கு மக்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது கால்நடைத் தீவன விலை ஏற்றம், பசளை இன்மை ஆகிய வற்றுடன் நல்லாட்சி அரசின் காலத்தில் வழங்கப்பட்ட வீட்டுத் திட்டத்தை ஒரு கட்ட நிதியுடன் நிறுத்தியமையால் மீள் குடியேறிய மக்கள் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குவது தொடர்பான வாசகங்கள் அடங்கிய பதாதைகளை தாங்கியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், ஆளுநர், மாவட்ட செயலாளர் உள்ளிட்டவர்களிற்கு தமது கோரிக்கை அடங்கிய மனு ஒன்றைக் கையளித்தனர்.

## மரண அறிவித்தல்



### திரு சின்னத்துரை பகவான்

இளைப்பாறிய ஆசிரியர் யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

கைதடி நுணாவிலைப் பிறப்பிடமாகவும், மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கா.சி.பகவான் அவர்கள் 02.11.2021 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலம் சென்ற சின்னத்துரை சின்னப்பிள்ளை தம்பதியின் அன்புமகனும், காலம் சென்ற சின்னத்துரை அன்னம்மா தம்பதியின் அன்பு மருமகனும், காலம்சென்ற மங்கயற்கரசியின் அன்புக் கணவரும், காலம் சென்ற கேசவன் மற்றும் சிவஅரியோம் பூபதி - கமலநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் அதிசோபனை, நித்தியானந்தன் (டாக்டர்), சச்சிதானந்தன் (கனடா), அமரர் வித்தியானந்தன் (ஜேர்மனி) மற்றும் சோதியானந்தன் (மேக்கன்டைல் பாதுகாப்புச் சேவை), அமரர் ஞானசோபனை (ஆசிரியர்) மற்றும் விவேகானந்தன் (கட்டடப்பொறியியலாளர் கொழும்பு), மதிசோபனை (தாதி உத்தியோகத்தர் கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னராஜ், இரஞ்சிதம் (இளைப்பாறிய ஆசிரியர்), விஜிகாந்தி (கனடா), வினோ (ஜேர்மனி) விக்கினேஸ்வரி (ஆசிரியை), தேவேந்திரன் (ஓய்வு நிலை உ.க.பணிப்பாளர் வடமாகாணம்), கலைவாணி (விரிவுரையாளர் திறந்த பல்கலைக்கழகம் நாவல), சிவகுமார் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நவசிவாயகம், பரமசிவம், மனோன்மணி, சுப்பிரமணியம், பத்மநாதன், மகேஸ்வரி மற்றும் நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோபிகா - சேகரன், மிருணிகா - ராகுலன், துங்கீசன், அஜந்தன், ஆதவன், குருபரன், எல்கனான் டேவிட், குகப்பிரியா, பவிசன் அமரர் ரேனிதா மற்றும் கிரித்திகன், ஜனிற்றா, ஜோனாத்தன், ஜஸ்ரினா ஆகியோரின் பேரனும் சசீந்திரன் (டாக்டர்) பவித்திரா - சுதர்ஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மட்டுவில் தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் 03.11.2021 புதன்கிழமை காலை 10 மணியளவில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று கைதடி நுணாவில் குச்சப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தகவல்**
**டாக்டர் நித்தியானந்தன்**
**(மகன்)**
**0776701370**
**மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மொட்டின் பிதாமகர் மைத்திரிதான்!

**ஆட்சிக் கட்டிலில் இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் – மொட்டுக் கட்சியின் – ஐந்தாவது ஆண்டு நிறைவு இன்றாகும்.**

**இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகு, ஸ்தாபிக்கப்பட்டு குறுகிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் ஆகிய அனைத்திலும் சாதனை படைத்து, பெரு வெற்றியை ஈட்டி, அரியணையில் ஏறிய கட்சி என்ற பெருமையை இலங்கை அரசியல் வரலாற்றில் பதித்த முதலாவது தரப்பு அதுதான். அதேபோல பெற்ற வெற்றியை குறுகிய காலத்தில் மண்ணாக்கிய கட்சியும் அதுதான் என்ற பெயரையும் கூட அது சம்பாதிக்கும் போல தோன்றுகின்றது. இப்போதைய அரசியல்கள நிலைவரங்கள் அத்தகைய எண்ணத்தைத்தான் நமக்குத் தந்து நிற்கின்றன.**

**முன்னர் 'எங்கள் ஸ்ரீலங்கா சுதந்திர முன்னணி' என்ற பெயரில் மொட்டுச் சின்னத்துடன் பதிவு செய்யப்பட்டு, அதிகம் பெயர், செயலின்றி இருந்த கட்சியை சுவீகரித்து, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இதே தினத்தில்தான் புதிய கட்சியாக பெயர் சூட்டி, அறிவித்துக் களத்தில் இறக்கினர் ராஜபக்ஷ தரப்பினர்.**

**2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோற்றுப் போனமையை அடுத்து ஸ்ரீலங்கா சுதந்திரகட்சித் தலைமை அவரிடம் இருந்து பறிக்கப்பட்டது. எதிர் அணிகளின் சார்பில் பொது வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றியீட்டிய மைத்திரிபால சிறிசேன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் அவர்தான் சு.கவின் தலைவராவார் என்ற சு.கவின் யாப்பு விதியைக் காட்டி, கட்சித் தலைமையை மஹிந்த ராஜபக்ஷவிடமிருந்து பிடுங்கிக் கொண்டார்.**

**இதில் அரசியல் வேடிக்கை ஒன்று உண்டு. 2005 நவம்பர் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ முதல் தடவையாக ஜனாதிபதியாக வெற்றியீட்டியபோது அதுவரை ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க, சு.கவின் தலைமைப் பதவியை தம்முடனேயே தொடர்ந்து வைத்துக் கொண்டார். அதனை மஹிந்தவிடம் அவர் கையளிக்கவில்லை. அதனை சந்திரிகாவிடம் இருந்து பிடுங்கிக் கொள்வதற்காக கட்சியில் தமக்கிருந்த ஆதரவு மற்றும் ஜனாதிபதி அதிகாரத்தை பயன்படுத்தி சு.கவின் யாப்பில் மாற்றம் கொண்டு வந்தார் மஹிந்தர். சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியானால் அவரே கட்சியின் தலைவராகவும் இருக்க வேண்டும் என்பதுதான் அந்த விதி.**

**அவர் கொண்டு வந்த அந்த யாப்பு விதி மாற்றத்தை வைத்தே 9 ஆண்டுகள் கழித்து அவரை வீழ்த்தினார் மைத்திரி.**

**2015 ஜனாதிபதித் தேர்தலின்போது, கடைசிக் கட்டத்தில் திடீரென அணி மாறி, எதிரணி வேட்பாளராகக் களமிறங்கிய மைத்திரி, அதுவரைத் தாம் வகித்து வந்த சு.க. பொதுச் செயலாளர் பதவியைத் தாமாகவே ராஜினாமாச் செய்ததை தவிர, சு.க. அடிப்படை உறுப்புரிமையிலிருந்து விலகவில்லை. அப்படிக் கட்சி மாறி – அணி மாறி – கட்சியின் உத்தியோகபூர்வ வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து மைத்திரிபால சிறிசேன களமிறங்கிய போதும், அவரைக் கட்சியில் இருந்து வெளியேற்றும் ஒழுங்கு நடவடிக்கையை விரைந்து எடுப்பதற்கு மஹிந்தரின் தலைமை தவறிவிட்டது .**

**அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று – ஜனாதிபதித் தேர்தல் களேபரத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும் செயற்பாடுகள் கவனிக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டு விட்டன. அடுத்தது – நிச்சயமாக வெல்வோம் என்ற உறுதியில் ராஜபக்ஷக்கள் இருந்தமையால், கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கின்ற விடயத்தின் முக்கியத்துவத்தை அவர்கள் கவனிக்காமல் விட்டுவிட்டார்கள்.**

**ஆனால் ராஜபக்ஷக்கள் எதிர்பாராத விதத்தில், மைத்திரிபால சிறிசேன வென்றார். வெல்லும் சமயத்திலும் தனது சுக உறுப்புரிமை விலக்கப்படவில்லை, அப்போதும் தான் கட்சி உறுப்பினரே என்பதை வைத்துக்கொண்டுதான் சு.கவின் தலைமைப் பதவிக்கும் அவர் களமிறங்கினார். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை பிரயோகித்து, காய் நகர்த்தி அவர் அதன் மூலம் சு.கவின் தலைமையை கைப்பற்றினார்.**

**அதன் விளைவுகள் இரண்டு.**

**முதலாவது – கட்சித் தலைமை உத்தியோகபூர்வமாகத் தங்களிடமிருந்து பறி போனமையால் அதுவரை இரண்டு தலைமுறைகளாகத் தாங்கள் போஷித்து வளர்த்த சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி, புதிய கட்சி ஒன்றை தனித்து தங்களுக்காக ஸ்தாபிக்க வேண்டிய கட்டாயம் ராஜபக்ஷக்களுக்கு ஏற்பட்டது. அதுவே மொட்டு கட்சியின் பிறப்பாக்கம்.**

**அடுத்தது – மிகப் பலவீனமான தலைவராக மைத்திரி இருக்கையில், அவரின் கண்முன்னேயே அவரது சுதந்திரக் கட்சியை வற்றவைத்து, சுருட்டி, பருத்தது மொட்டுக் கட்சி.**

**ஆக மொட்டு கட்சி தோன்றி, ஸ்தாபிக்கப்பட்டமைளக்கு பிதாமகர் மைத்திரிதான்.**

# மக்கள் போராட்டத்தை வீதிக்கு இறக்குவோம்!

## சஜித் சூளுரை

அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டு பயணத்தை நிறுத்த வேண்டும் என்றும், அதைச் செய்யக்கூடிய ஒரே சக்தி ஐக்கிய மக்கள் சக்தியே என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மக்கள் போராட்டத்துக்காக வீதியில் இறங்கிப் போராட வேண்டிய தருணம் உருவாகியுள்ளதாக கூறிய எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கத்தின் தன்னிச்சையான போக்கை மாற்றக்கூடிய சக்தி மக்களின் போராட்டம் மூலமே நிறைவேற்ற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அரசாங்கம் எடுக்கும் தவறான முடிவுகளால் நாட்டில் ஏற்பட்டுள்ள பாரதூரமான நிலைமை மிகவும் துயரமானது என்று கூறிய எதிர்க்கட்சித் தலைவர், தவறு ஏற்படும் போது ஓர் அடி பின்நோக்கிச் சென்று அந்தத் தவறுகளைத் திருத்திக்கொண்டு சரியான பாதையில் செல்வது நெகிழ்வுத் தன்மையுள்ள ஒரு தலைவரின் பொறுப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

உரம் தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தினால் இன்று முழு நாடும் பாரிய அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ளதாகக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், உரம் குறித்து எடுக்கப்பட்ட தவறான தீர்மானத்தை திருத்திக் கொள்ள ஓர் அடி பின்னோக்கிச் சென்று பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். அவ்வாறான ஒரு நடவடிக்கையை முன்னெடுத்துச் சென்று சரிசெய்வதைத் தவிர அரசாங்கத்துக்கு வேறு மாற்று வழியில்லை என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்பாட்டுப் பிரதானி ஹரின் பெர்னாண்டோவின் வத்தளை தேர்தல் தொகுதியின் தலைமை அலுவலக திறப்பு விழா நிகழ்வில் பிரதம அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விசேட செயலணிகளை அமைக்கும் போது செய்திருக்கக்கூடாத ஒரு செயலை அரசாங்கம் செய்துள்ளதாகக் தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர், இத்தகைய செயற்பாடுகள் நாட்டில் நல்லிணக்கத்தை இழக்க வழி வகுக்கும் எனவும் தெரிவித்தார்.

சொந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க தான், புலனாய்வுப் பிரிவின் தலைவருடன் கூட்டுச் சேர்ந்து செயல்படுகிறேன் என முற்றிலும் பொய்யான அவதூறுப் பிரசாரத்தை சில தரப்புகள் பரப்பி வருகின்றன என்றும் இதேபோன்ற தாக்குதல்களையே ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதி எதிர்நோக்கினார் எனவும் அவர் கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் பயங்கரவாதிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் கீழ் இது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

வயதை விட திறமைக்கும் இயலுமைக்கும் ஆற்றல்களுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்றும் அது அரசியலுக்கும் பொருந்தும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

அரசியலில் ஒரு புரட்சிகர ஆளுமையாக ஹரின் பெர்னாண்டோ செயற்படுகின்றமையோடு சவாலான தீர்மானங்களை எடுக்க அவர் ஒருபோதும் தயங்கியவரல்லர் எனக் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டின் உச்சத்துக்கு செல்லும் இயலுமை ஹரின் பெர்னாண்டோவுக்கு இருப்பதாகவும் கூறினார்.



# லசந்த படுகொலை தொடர்பிலான வழக்கு ஹேக் மக்கள் தீர்ப்பாயத்தில் இன்று விசாரணை

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலை குறித்த வழக்கு நெதர்லாந்தின் ஹேக் மக்கள் தீர்ப்பாயத்தில் இன்று விசாரணை செய்யப்பட உள்ளது.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்களுக்குப் பொறுப்புக் கூறாமை முடிவுக்குக் கொண்டு வரும் சர்வதேச தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. இந்த நிலையில் லசந்த படுகொலை தொடர்பில் அரசாங்கத்துக்கு எதிராக ஹேக் மக்கள் தீர்ப்பாயத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சவுதி அரேபிய ஊடகவியலாளர் ஜமால் கசோக்கீ உள்ளிட்ட சில ஊடகவியலாளர்களின் படுகொலைகள் தொடர்பிலும் விசாரணை நடாத்தப்பட உள்ளது. லசந்த கொலை தொடர்பான வழக்கு முதலாவதாக ஹேக் மக்கள் தீர்ப்பாயத்தில் விசாரணைக்கு இன்று எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளின் போது லசந்தவின் புதல்வி அஹிம்சா சாட்சியமளிப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் ஹேக்கில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் லசந்த படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

# அமெரிக்காவில் சீரற்ற காலநிலை விமான சேவைகள் ரத்தானது



சீரற்ற வானிலை காரணமாக அமெரிக்க எயார்லைன்ஸ் நிறுவனம் நூற்றுக்கணக்கான விமான சேவைகளை ரத்து செய்துள்ளதாகசர்வதேசஊடகங்கள்செய்திவெளியிட்டுள்ளன.

நேற்றும் நேற்று முன்தினமும் 800 இற்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டன என தெரிவிக்கப்படுகின்றது. மழையுடன் கூடிய காலநிலை காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை முதல் 1,500 க்கும் மேற்பட்ட விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து இரண்டு நாள்களாக பெய்யும் மழையுடன் கூடிய கடுமையான காற்று காரணமாக சேவைகள் பாதிக்கப்பட்டன என அமெரிக்க எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி தெரிவித்துள்ளார். பிறக்கப்போகும் புதிய மாதத்துடன் சேவைகளை படிப்படியாக வழமைக்கு கொண்டுவர முடியும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## ஜப்பான் தேர்தல்

# தனிப்பெரும்பான்மையை தக்க வைத்தது ஆளும் கட்சி



ஜப்பான்தேர்தலில்ஆளும்லிபரல் டெமாக்ரடிக்கட்சிதனிப்பெரும்பான்மையைப் பிடித்து ஆட்சியயை கைப்பற்றியுள்ளது.

கூட்டணிக் கட்சியின் ஆதரவு இல்லாமல் லிபரல் டெமாக்ரடிக் கட்சி 233 க்கும் மேற்பட்ட இடங்களை கைப்பற்றியுள்ளது.

அதன்படிகடந்தஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 465 இடங்களில் 276 இடங்களை லிபரல் டெமாக்ரடிக் கட்சி கைப்பற்றியது 64 வயதுடைய புமியோ கிஷிடா ஒரு மாதத்திற்கு முன்னர் லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். ஜப்பானிய அரசியலில் பல தசாப்தங்களாக ஆதிக்கம் செலுத்திய லிபரல் டெமாக்ரடிக் கட்சி கொரோனாத் தொற்றைக் கையாண்டத விதம் தொடர்பாக விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டார்.

இதனை அடுத்து யோஷிஹிட் சுகா செப்டெம்பர் மாதம் பிரதமர் பதவியை இராஜினாமா செய்ததை அடுத்துபுமியோகிஷிடாபுதியபிரதமராக பதவியேற்றார் இந்நிலையில் பிரதமர் புமியோ கிஷிடாவுக்கு இது ஒரு பெரிய வெற்றி என கூறப்படுகின்றது



# நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்தம் தொடர்பாக ஆஸ்திரேலியா பொய்யுரைத்துள்ளதாக மீண்டும் குற்றம்சாட்டுகிறது பிரான்ஸ்

நீர்மூழ்கிக் கப்பல் ஒப்பந்த விடயம் குறித்து தன்னிடம் ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்கொட் மொரிசன், பொய் கூறியுள்ளார் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார். 12 நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்க 37 பில்லியன் டொலர் ஒப்பந்தத்தை ஆஸ்திரேலியா ரத்து செய்த காரணத்தால் பிரான்ஸ் கோபமடைந்துள்ளது. அதற்கு பதிலாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்துடன் ஒரு புதிய பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு ஆஸ்திரேலியா பேச்சு நடத்தியது.

கடந்த செப்டம்பரில் இரு நாடுகளுக்கும் இடையில் இந்த ஒப்பந்தம் குறித்து கருத்து வேறுபாடு காணப்படும் நிலையில் ஜி20 உச்சிமாநாட்டில் இரு தலைவர்களும் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

ஆஸ்திரேலியா மீது மிகுந்த மரியாதை இருப்பதாகவும் இந்த நம்பிக்கையை உறுதி செய்ய உண்மையாக இருக்க வேண்டும் என்றும் இம்மானுவேல் மக்ரோன் கூறினார்.

# ஒன்றையொன்று குற்றம் சாட்டும் பிரித்தானியாவும் பிரான்ஸும்

மீன்பிடிப் படகுகளுக்கான அனுமதி தொடர்பாக பொரிஸ் ஜோன்சனுக்கும், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கும் இடையே தொடர்ந்து மோதல் நிலவி வருகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, குறித்த விடயம் தொடர்பாக இரு நாடுகளின் தலைவர்களும் கலந்துரையாடி இருந்தனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

துறைமுக அணுகல் மீதான அச்சுறுத்தல்களில் இருந்து பின்வாங்குவது பிரான்ஸின் பொறுப்பாகும் என பிரித்தானிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இருப்பினும் இன்று சாதகமான பதில் கிடைக்கும் என நம்புகிறேன் என பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார். இந்தவிடயம்இருநாடுகளுக்கு இடையிலான இருதரப்பு பிரச்சினை அல்ல என்றும் இது ஐரோப்பிய ஒன்றிய பிரச்சினை என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். பிரித்தானிய கடற்பரப்பில் பிரான்ஸின் மீன்பிடிப் படகுகள் இயங்குவதற்கு அதிக அனுமதிப் பத்திரங்களை வழங்கப்படுவதற்கான காலக்கெடு இன்று செவ்வாய்க்கிழமை வரை உள்ளது. அவ்வாறு உரிமை வழங்கப்படாவிட்டால் சில துறைமுகங்களில் இருந்து இங்கிலாந்து மீன்பிடிப் படகுகள் தடைசெய்யப்படும் என பிரான்ஸ் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.



# டோக்கியோ ரயிலில் கத்திக்குத்து; 17 பேர் காயம்



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு 17 பேர் காயமடைந்துள்ளனர்.

அந்நாட்டில் பயன்படுத்தப்படும் சுரங்கவழியினுடனான ரயிலில் இந்தத் தாக்குல் இடம்பெற்றுள்ளது.

அந்நாட்டு நேரப்படி நேற்றிரவு 8 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த ரயிலிலிருந்து அதிகளவான மக்கள் ஓடிச் சென்று ஜன்னல்களினூடாக வெளியேறும் காணொலிக் காட்சிகள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் தாக்குதல் மேற்கொண்ட 20 வயது மதிக்கத்தக்க நபரை ஜப்பான் பொலிஸார் கைது செய்துள்ளனர். கடந்த ஓகஸ்ட் மாதம் டோக்கியோ பயணிகள் ரயிலில் இடம்பெற்ற கத்திக் குத்து சம்பவத்தில் 10 பேர் காயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது

# ஈழ அகதிகளுக்கான வீடுகள் கட்டும் திட்டம் இன்று ஆரம்பித்து வைத்தார் தமிழக முதல்வர்



தமிழ்நாட்டில் 106 முகாம்களில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்காக இருபதாயிரம் வீடுகள் கட்டும் திட்டம் இன்று தொடங்கப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த தமிழ்நாட்டு முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் ஒருதாய் மக்களே. தமிழக, இலங்கைத் தமிழர்கள் அனைவரும் இனத்தால், மொழியால், கலாசாரத்தால் ஒன்றிணைந்தவர்கள். தமிழகத் தமிழர்களையும் இலங்கைத் தமிழர்களையும் பிரிப்பது கடல் மட்டுமே.

1983 முதல் ஈழத் தமிழர்கள் தமிழகத்துக்கு வருவது தொடங்கியது. அவர்களுக்காக முகாம்கள் அமைக்கப்பட்டன. இந்த முகாம்களது நிலைமை மிக மோசமாக இருக்கிறது என்பதை உணர்ந்து, எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த நேரத்தில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்தினார். ஆனால், கடந்த பத்தாண்டு காலத்தில் அ.தி.மு.க. அரசு அவர்களைப் பற்றி எந்தவித அக்கறையையும் காண்பிக்கவில்லை என தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் அகதிமுகாம்கள் என்பதை மாற்றி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம் என்று அழைப்போம் என்று சட்டமன்றத்திலே அறிவித்தோம்.

அதனை நடைமுறைப்படுத்தும் நாளாக இன்றைய நாள் அமைந்திருக்கிறது, என்றும் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டார்.

## புனித் ராஜ்குமாரின் கண்களால் நால்வருக்கு பார்வை கிடைத்தது



அண்மையில் தனது 46 ஆவது வயதில் திடீரென காலமான கன்னட நடிகரும் சமூக சேவையாளருமான புனித் ராஜ்குமாரின் இரண்டு கண்கள் மூலமாக நான்கு பேருக்குப்பார்வை கிடைத்துள்ளது.

தனது பெற்றோரைப் போலவே புனித் ராஜ்குமாரும் தனது கண்களைத் தானம் செய்திருந்தார். புனித்தின் கண்களைத் தானமாகப் பெற்ற மருத்துவர்கள், அதன் மூலம் நான்கு பேருக்கு பார்வை கிடைக்க வழி செய்துள்ளனர். விழிப்படலத்தின் முன்பகுதி, பின்பகுதியை தனித்தனியாக பிரித்து நவீன தொழில்நுட்பம் மூலமாக சத்திர சிகிச்சை செய்து, நால்வருக்குப் பொருத்தியுள்ளோம் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். கர்நாடகாவைச் சேர்ந்த இளம் வயதினர் இதன் மூலம் பயனடைந்துள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

## தமிழகத்தில் தீபாவளி நாளில் பட்டாசு வெடிப்பதற்கான நேரங்கள் அறிவிப்பு



தீபாவளித் திருநாளன்று அதிக அளவில் பட்டாசு வெடிப்பதால் நிலம், நீர், காற்று உள்ளிட்ட வாழ்வாதாரங்கள் பெருமளவில் மாசுபடுகின்றன. இதன் காரணமாக பட்டாசு வெடிக்க இந்தியாவில் மாநில அளவில் நேரக்கட்டுப்பாடு விதிக்கப்படுகிறது.

அவ்வகையில் கடந்த ஆண்டைப் போல் இந்த ஆண்டும் தீபாவளிப் பண்டிகைத் தினத்தன்று 2 மணி நேரம் மட்டுமே பட்டாசு வெடிக்க வேண்டும் என தமிழக அரசு அறிவுறுத்தியுள்ளது.

காலை 6 மணி முதல் 7 மணி வரையும், இரவு 7 மணி முதல் 8 மணி வரையும் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும் என தமிழக சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை அறிவித்துள்ளது. பட்டாசு வெடிப்பதற்கான நெறிமுறைகளும் வெளியிடப்பட்டுள்ளன.




## வன்னியர்களுக்கான 10.5 சதவீத இட ஒதுக்கீடு ரத்து மேல்முறையீடு செய்வதற்கு தமிழக அரசு முடிவு

வன்னியர்களுக்கான 10.5 சதவீத இடஒதுக்கீடு ரத்துச் செய்யப்பட்ட நிலையில், அது தொடர்பில் மேல்முறையீடு செய்ய பரிந்துரைக்கப்படும் என தமிழக அரசு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் வன்னியர்களுக்கான 10.5 சதவீத இட ஒதுக்கீட்டை எதிர்த்து வழக்குத் தொடரப்பட்டது. இந்த வழக்கின் விசாரணை முடிவடைந்து நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்போது, முறையான கணக்கெடுப்பு விவரங்கள் இல்லாமல் இட ஒதுக்கீடு எப்படித் தர முடியும்? என்றும், சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்க முடியுமா? என்றும் பல்வேறு கேள்விகளை எழுப்பிய நீதிபதிகள், இது அரசியல் நோக்கங்களுக்காக அவசரமாகக் கொண்டுவரப்பட்ட சட்டமூலம் என தெரிவித்து, வன்னியர்களுக்கான 10.5 சதவீத உள் இட ஒதுக்கீட்டை ரத்துச் செய்து உத்தரவிட்டனர்.

இதனால், வன்னியர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 10.5 சதவீத இடஒதுக்கீட்டைப் பெற முடியாது. இந்த வருடம் கல்வியில் 10.5 சதவீத இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களின்நிலைஎன்னவாகும்? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

இந்தத் தீர்ப்பு ஏமாற்றம் அளிப்பதாகக் கூறிய பா.ம. கட்சியின் வழக்கறிஞர், தமிழக அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய வேண்டும் என வலியுறுத்தினார். மேல்முறையீடு குறித்து தமிழக அரசு வழக்கறிஞரிடம் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, மேல்முறையீடு செய்ய தமிழக அரசுக்கு பரிந்துரைக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் இது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி மற்றும் அதிகாரிகளுடன் அவசர ஆலோசனை நடத்தினார்.

அப்போது, வன்னியர்களுக்கான இட ஒதுக்கீடு ரத்துத் தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு சார்பில் மேல்முறையீடு செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சட்டப் போராட்டம் மூலம் நீட் தேர்வை ரத்துச் செய்ய நடவடிக்கை தொடரும் என தமிழக அமைச்சர் தகவல்

தமிழகத்தில் மாணவர்கள் நலன் கருதி, சட்டப்போராட்டம் மூலம் நீட் தேர்வை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்தார்.

தமிழகம் முழுவதும் 600 நாள்களுக்குப் பின்னர் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பாடசாலைகள் திறக்கப்பட்டு மாணவர்கள் வந்துள்ளனர்.

நீண்டகாலமாக மாணவர்கள் வீடுகளில் இருந்ததால் மன அழுத்தத்தில் இருந்தனர். தற்போது பாடசாலைகளுக்கு குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் வந்திருந்தாலும் மகிழ்ச்சியுடன் பாடங்களை கவனித்து வருகின்றனர், என்று அவர் தெரிவித்தார்.



நீட் தேர்வுப் பயத்தில் மாணவர்கள் தற்கொலை செய்துகொண்டமை குறித்து செய்தியாளர்கள் கேட்டபோது, 'நீட் தேர்வு தமிழகத்திற்கு நடத்தப்படாதிருக்க சுகாதாரத்துறை அமைச்சர் டெல்லி சென்று பேச்சு நடத்தியுள்ளார். முதல்வரைப் பொறுத்தவரை அவர், தமிழகத்தில் சட்டப்போராட்டம் நடத்தி நீட் தேர்வை ரத்துச் செய்ய அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார்.

'மாணவர்கள் தயவு செய்து தற்கொலை செய்யும் எண்ணத்தைக் கைவிடவேண்டும்' என்று அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது முதலாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பாடசாலைகள் திறக்கப்பட்டு உள்ளதால் அனைத்து சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்க கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், மாணவர்களின் கல்வி எதிர்காலம் எவ்வளவு முக்கியமோ அதைவிட மாணவர்களின் உடல்நலம் முக்கியம் என்பதை உணர்ந்து தமிழக அரசு செயல்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# உரத்தை வழங்குமாறு கோரி மட்டு. விவசாயிகள் போராட்டம்!



தூக்குத்தண்டனை கைதிகளுக்கு தங்களது இறுதி விருப்பத்தைக் கேட்கும் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றபோதிலும்,விவசாயிகளுக்கு அந்த சந்தர்ப்பத்தை ஜனாதிபதி வழங்காதமை கவலைக்குரியது என விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாய அமைச்சரின் கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், உரத்தை வழங்கக் கோரியும் நேற்று (திங்கட்கிழமை) மாலை மட்டக்களப்பு வவுணதீவில் விவசாயிகள் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னதாக இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே வடக்கு, கிழக்கில் உள்ள விவசாயிகள் தனக்கு எதிராக எந்தவொரு ஆர்ப்பாட்டத்திலோ போராட்டங்களிளே கலந்துகொள்ளவில்லையென்று தெரிவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுணதீவு உழவர் சிலைக்கு முன்பாக விவசாய அமைப்புக்களைச் சேர்ந்த விவசாயிகள்கவனவீர்ப்புபோராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் போது விவசாயிகள் அமைச்சருக்கு எதிராகவும், உரம் வேண்டியும் கோஷங்களை எழுப்பியதுடன், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் அண்மையில் விவசாயிகள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்கும் இதன் போது எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

கடந்த காலங்களில் மண் கடத்தலில் ஈடுபட்டவர்கள் தற்போது உரத்தை வைத்தும் கடத்தல் செய்ய நினைப்பதால் விவசாயிகளே பாதிப்புக்குள்ளாகுகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர். அதேவேளை தமது உரப்பிரச்சினைக்கு மிக விரைவில் தீர்வை வழங்காவிடின் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசா–யிகளும் ஒன்று திரண்டு மிக விரைவில் விவசாய அமைச்சருக்கு எதிராக மட்டக்களப்பில் பாரிய போராட்டத்தில் ஈடுபடவுள்ளோம் எனவும் இதன்போது தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் அறுவடை காலத்தில் விவசாயிகள் பாரிய நஷ்டத்தை எதிர்கொள்ளும்போது அதற்காக எந்த அரசாங்கம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்ததோ அந்த அரசாங்கம் இந்த நாட்டில் பாரிய பின்னடைவைச் சந்திக்கும்எனவும்அதற்குதயாராகயிருக்குமாறும் விவசாயிகள் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் அண்மையில் தெரிவித்த கருத்து சரியானது ஏனென்றால் அவருடன் ஒட்டிவாழ்பவர்கள் சேதனப்பசளை உற்பத்திக்காக வந்திருக்கின்றார்கள். குளத்தின் களியை அள்ளிக்கொண்டு இந்த சேதனப்பசளையை உற்பத்திசெய்கின்றார்கள்.அவர்கள்மில்லியனர்களாக மாறுவார்கள்.நாங்கள் பிச்சைக்காரர்களாகமாறுவோம்.விவசாயக்குடும்பங்கள் நடுவீதிக்கு வரும் எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## இராணுவ வீரரொருவர் விபத்தில் சிக்கி சாவு

### தம்பலகாமத்தில் சம்பவம்

திருகோணமலை – கந்தளாய் பிரதான வீதி 13 ஆம் கட்டை சந்தியில் காயமடைந்த நிலையில்விழுந்துகிடந்தஇளைஞரொருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) இரவு 7.10 மணியளவில் இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்தவர் கந்தளாய், கன்தலாவ பகுதியைச் சேர்ந்த இராணுவ வீரரான சசில மல்சான் (வயது – 21) எனவும் தெரியவருகின்றது.

தம்பலகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 13 ஆம் கட்டை சந்தியில் இளைஞரொருவர் வீதியோரத்தில் தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் விழுந்து கிடக்கிறார் என 1990 அவசர அம்புலன்ஸ் சேவைக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக குறித்த இளைஞரை அருகில் உள்ள தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சையளிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும், நடந்து சென்ற இளைஞரை வாகனம் மோதிச் சென்றிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். குறித்த இளைஞரின் தலையில் காயம் ஏற்பட்டுள்ளதுடன், அருகில் குடையொன்று காணப்படுவதாகவும் அயலவர்கள் குறிப்பிடுகின்றனர்.

உயிரிழந்த இளைஞரின் சடலம் தற்போது தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பிலான விசாரணைகளைத் தம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பு ஏறாவூர் பகுதியில் யானை தாக்கி வயோதிபர் சாவு

மட்டக்களப்பு– ஏறாவூர் பொலிஸ் பிரிவின் பதுளை வீதியை அண்டிய பகுதிக்குள் உள் நுழைந்த காட்டு யானையால் விவசாயியான வயோதிபர் ஒருவர் தாக்கப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் வந்தாறுமூலை, மூங்கிலடி வீதியை அண்டி வசிக்கும் 5 பிள்ளைகளின் தந்தையான நாகலிங்கம் தாமோதரம் (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

## உயிர்களைப் பலியெடுக்கின்ற நுண்நிதி கடனை ரத்துச்செய்!

### அம்பாறையில் கையெழுத்து வேட்டை



அம்பாறை மாவட்ட பெண்கள் வியாபார அமைப்பு ஏற்பாடு செய்துள்ள ஒரு லட்சம் கையெழுத்து வேட்டை பெறும் நிகழ்வு நேற்று அம்பாறையில் ஆரம்பித்து வைக்கப்பட்டிருந்தது. குறித்த கையெழுத்து வேட்டை 'செலுத்தவும் முடியாது. செலுத்தவும் மாட்டோம்' எனும் தொனிபொருளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. உயிர்களைப்பலி எடுக்கும் நுண்நிதி கடனை ரத்துச்செய்யுமாறு வலியுறுத்தியே இந்தக் கையெழுத்து வேட்டை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.





## மட்டு. கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள நிலப்பகுதியை வேலியிட்டு அடைக்க முயற்சி!

மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள வடிச்சல் நிலப்பகுதியை இன்று (செவ்வாய்க்கிழமை) காலை வேலியிட்டு அடைக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பிரதேச மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

கல்லடியை ஊடறுத்து கல்லடி பாலத்தை இணைக்கும் வகையில் உள்ள குறித்த வடிச்சல் பகுதியை இன்று சிலர் வேலியடைக்க முற்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பிரதேச கிராம சேவையாளர் உட்பட கிராம மக்கள் அப்பகுதிக்கு வந்து இந்தச் சம்பவத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்போது அங்குவந்த பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்யப்படும் என்று பொதுமக்களிடம் தெரிவித்தார்.

சில காலங்களாக போலி உறுதிகளைக்கொண்டு மேற்படி பகுதியை அபகரிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் நாங்கள் அதனைத் தடுத்து நிறுத்திவருகின்றோம் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வடிச்சல் பகுதி ஊடாகவே மழைக்காலங்களில் நொச்சமுனை தொடக்கம் கல்லடி வரையான பகுதிகளில் உள்வரும் வெள்ளநீர்கள் வடிந்து கல்லடி வாவியில் கலப்பதாகவும் அந்தப் பகுதியை அடைத்தால் குறித்த பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதியை பாதுகாப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் உரிய அதிகாரிகளும் விரைவாக நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர். இந்தச் சம்பவம் காரணமாக கல்லடி பாலம் பகுதியில் பதற்ற நிலைமை ஏற்பட்டதுடன் போக்குவரத்து நெரிசல்களும் ஏற்பட்டன

# இலங்கை அணியை 26 ஓட்டங்களால் வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்தது இங்கிலாந்து அணி



ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் - 12 சுற்றுக்கான நேற்றைய போட்டியில், இலங்கை அணியை, இங்கிலாந்து அணி 26 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

குழு 1 இற்கான இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இங்கிலாந்து அணி, 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 164 ஓட்டங்களைப் பெற்றது. ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை எடுத்தார். இதுவே அவரது முதல் ரி-20 சதமாகும். அணித்தலைவர் ஒயின் மோர்கன் 40 ஓட்டங்களைச் சேர்த்தார். இலங்கை அணியின் வனிந்து ஹசரங்க 3 விக்கெட்டுக்களையும் துஷ்மந்த சமீர 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 165 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, 19 ஓவர்களில் 137 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழக்க, இங்கிலாந்து அணி 26 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. வனிந்து ஹசரங்க 34 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ மற்றும் தசுன் சானக இருவரும் தலா 26 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். இங்கிலாந்து அணியின் மொயின் அலி, அடில் ரஷிட் மற்றும் கிறிஸ் ஜோர்டன் மூவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கிறிஸ் வோக்ஸ் மற்றும் லியாம் லிவிங்ஸ்டன் இருவரும் ஒவ்வொரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக 67 பந்துகளில் 101 ஓட்டங்களை எடுத்த ஜோஸ் பட்லர் தெரிவானார்.

இந்த வெற்றியோடு குழு 1 இல் விளையாடிய நான்கு போட்டிகளிலும் வெற்றிபெற்றுள்ள இங்கிலாந்து அணி 8 புள்ளிகளோடு பட்டியலில் முதலிடத்தில் உள்ளது. இலங்கையணி ஒரேயொரு போட்டியில் வெற்றிபெற்று 2 புள்ளிகளுடன் நான்காமிடத்திலுள்ளது.



# அடுத்த வருட ஐ.பி.எல்.அணி வீரர்களுக்கான ஏலம் செலவிடும் தொகை பற்றிய விவரங்கள் அறிவிப்பு

அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் 10 அணிகள் பங்கேற்கின்றன. ஏற்கனவே உள்ள 8 அணிகளுடன் கூடுதலாக அகமதாபாத், லக்னோ ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன. நடைபெறவிருக்கும் வீரர்களுக்கான ஏலத்தில் தக்கவைக்கும் வீரர்கள், செலவுத் தொகை போன்றவற்றின் விவரங்கள் அனுமானிக்கப்பட்டிருந்த நிலையில், அவை இப்போது உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஐ.பி.எல். ஏலத்தில் ஒவ்வொரு அணியும் இந்திய நாணய மதிப்பில் 90 கோடி வரை செலவிடலாம் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது. ஒவ்வொரு அணியும் அதிகபட்சமாக 4 வீரர்கள் வரை தக்கவைத்துக் கொள்ளலாம் என்றும் 3 இந்தியர், ஒரு வெளிநாட்டவர் அல்லது 2 இந்தியர், 2 வெளிநாட்டவர் என்ற அடிப்படையில் அந்த எண்ணிக்கையைத் தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய இரு அணிகளும் ஏலத்திற்கு முன்பாக 3 வீரர்களை, 2 இந்தியர், ஒரு வெளிநாட்டு வீரர் என்ற அடிப்படையில் தேர்வு செய்து கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தக்கவைத்துக் கொள்ளப்படும் வீரர்களுக்கான சம்பள விவரமும் வெளியிடப்பட்டுள்ளது. ஒரு அணி 4 வீரர்களைத் தக்கவைத்துக் கொண்டால் அவர்களுக்கு அதிகபட்சமாக 42 கோடி வரை செலவிடலாம். 3 வீரர்களுக்கு 33 கோடியும், 2 வீரர்களுக்கு 24 கோடியும், ஒரு வீரருக்கு 14 கோடியும் வழங்கப்படலாம். மொத்தமுள்ள 90 கோடியில் இதுவும் அடங்கும்.

ஒரு அணி 4 வீரர்களையும் 42 கோடிக்குத் தக்கவைத்துக்கொண்டால் ஏலத்தில் 48 கோடி வரை மட்டுமே செலவிட முடியும். அணியொன்றில் 4 வீரர்கள் தக்கவைத்துக்கொள்ளப்பட்டால் அந்த அணியின் முதல் வீரருக்கான தொகை 16 கோடியாக இருக்கும். 2, 3, 4 ஆவது வீரர்களுக்கு முறையே 12 கோடி, 8 கோடி, 6 கோடிகள் வழங்கப்படும். அதே நேரத்தில் 3 வீரர்களைத் தக்கவைத்தால், முதல் வீரருக்கான தொகை 15 கோடியாக இருக்கும். அதற்கடுத்து 11 கோடி, 7 கோடி வழங்கப்படும். அந்த அணி ஏலத்தில் 57 கோடி வரை மட்டுமே செலவிட முடியும். 2 வீரர்களைத் தக்கவைத்தால், முதல் வீரருக்கான தொகை 14 கோடியாக இருக்கும். அடுத்த வீரருக்கு 10 கோடி வழங்கப்படும். ஏலத்தில் 66 கோடி வரை அந்த அணியால் செலவிடமுடியும். ஒரேயொரு வீரரை மட்டுமே தக்கவைத்தால் அவருக்கு 14 கோடி கொடுக்க வேண்டும். அப்போது ஏலத்தில் 74 கோடி வரை வீரர்களை வாங்கிட அந்த அணியால் பணத்தை உபயோகித்திட முடியும்.

8 அணிகளும் தக்கவைத்துக்கொள்ளும் வீரர்களின் பட்டியலை நவம்பர் 30 ஆம் திகதிக்குள் தெரிவிக்க வேண்டும். 2 புதிய அணிகளும் டிசெம்பர் 1 முதல் 25 ஆம் திகதிக்குள் 3 வீரர்களைத் தேர்வு செய்து அறிவிக்கலாம். அடுத்த ஆண்டு ஜனவரி தொடக்கத்தில் வீரர்களுக்கான ஏலம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒரே வருடத்தில் அதிக ரி-20 விக்கெட்டுக்கள் இலங்கையணியின் ஹசரங்க சாதனை!

ரி-20 போட்டிகளில் ஒரு வருடத்தில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவர் என்ற சாதனையை இலங்கைக் கிரிக்கெட் அணியின் சுழல்பந்துவீச்சாளர் வனிந்து ஹசரங்க வசப்படுத்திக் கொண்டிருக்கிறார்.

நேற்று இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ணத்தொடருக்கான சூப்பர் - 12 சுற்றுப் போட்டியில் மொத்தமாக மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்திய வனிந்து ஹசரங்க, இந்த ஆண்டில் மொத்தம் 34 விக்கெட்டுக்களை வீழ்த்தி இந்தச் சாதனையைப் புரிந்திருக்கிறார்.

இந்தச்சாதனை இதுவரை, கடந்த 2018 ஆம் ஆண்டில் 31 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியிருந்த ஆஸ்திரேலியப் பந்துவீச்சாளரான அன்ட்ரூ டை வசம் இருந்தது. வனிந்து ஹஸரங்க இந்தச் சாதனையை முறியடித்திருக்கும் அதே வேளை, இந்தச் சாதனையை இந்த வருடத்திலேயே இன்னுமொருவரால் முறியடிக்கப்படக்கூடிய வாய்ப்பும் காணப்படுகிறது. தென்னாபிரிக்க அணியின் சுழல்பந்துவீச்சாளரான தப்ரைஸ் சம்ஷி, இந்த ஆண்டு 32 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஹஸரங்கவை முந்துவதற்கான சந்தர்ப்பத்தைக் கொண்டவராக விளையாடிவருகிறார்.




Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.





## வரலாற்றில் முதல் தடவையாக

# சிறுபோக நெற்செய்கை வெற்றி கிளிநொச்சி மக்களுக்கு மகிழ்ச்சி

கிளிநொச்சிமாவட்டத்தில்நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள 78.6 வீதமான நிலப்பரப்பில் இவ்வாண்டு சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டதுடன், காலபோகச் செய்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என மாவட்ட பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜகோபு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களைவிட இவ்வாண்டு அதிகூடிய நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் –

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஒன்பது வரையான நீர்ப்பாசன குளங்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்தால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அதாவது கிளிநொச்சி கிழக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள இரணைமடு குளம், பிரமந்தனாறு குளம், கல்மடுக்குளம், கனகாம்பிகை குளம் உள்ளிட்ட நான்கு குளங்களும் மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அக்கராயன் குளம், வன்னேரிக்குளம் குடமுருட்டிகுளம், கரியாலை நாகபடுவான்குளம், உள்ளிட்ட ஐந்து குளங்களும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இதில் கிழக்குப் பகுதியில் 26 ஆயிரத்து 297 ஏக்கர் நிலப்பரப்பிலும் மேற்குப் பகுதியில் 7 ஆயிரத்து 367ஏக்கர் நிலப்பரப்பிலும் என சுமார் 33 ஆயிரத்து 664 ஏக்கர் வரையான நிலப்பரப்பு நீர்ப்பாசன பரப்பளவைக் கொண்டுள்ளது.

இது வடக்கு மாகாணத்தில் 50 வீதமான நிலப்பரப்புகளைக் கிளிநொச்சி மாவட்டம் கொண்டுள்ளது. இந்தநிலையில் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்ட சிறுபோக செய்கையின் போது மொத்த நிலப்பரப்பில் 78.6 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டிலே 68.2 வீதமான நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளம், அக்கராயன் குளம், குடமுருட்டி குளம் ஆகிய குளங்களின் இவ்வாண்டு கால போகச் செய்கை 100 வீதம் பூர்த்தி அடைந்துள்ளதாகவும் கல்மடு குளத்தின் 75 வீதமான நிலப்பரப்புகளும், வன்னேரிகுளத்தின் கீழ் 70 வீதமான நிலப்பரப்புக்களும் புதுமுறிப்பு குளத்தில 92 வீதமானநிலப்பரப்பிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

# எரிமலையாக நாடு சஜித் குற்றச்சாட்டு

ஒருபுறம் வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ள நிலையில், மறுபுறம் பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியில் நாடு எரிமலையில் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நெற் செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகள், தேயிலை விவசாயிகள், சிறு ஏற்றுமதி பயிர்ச்செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகள் உட்பட ஒட்டு மொத்த விவசாய தலைமுறையும் அநாதரவாகிவிட்டதாகவும், இளம் தலைமுறையினர் வேலைவாய்ப்புகளை இழந்து கடும் மன உளைச்சலில் வாழ்ந்து வருகின்றனர் என்றும், நாட்டில் செயற்பட்டு வரும் இந்த பொறுப்பற்ற அரசாங்கத்தால் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைக்கு வந்துள்ளனர் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ களுத்துறை அகலவத்தை தேர்தல் தொகுதி ஐக்கிய மக்கள் சக்தியின் அமைப்பாளர் ஜகத் விதானவால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட போதே இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வின் போது தொகுதி அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது. பெரும் திரளான மக்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.

# கொக்கைன் போதைப்பொருளுடன் கென்ய நாட்டு பிரஜை ஒருவர் கைது

50 கொக்கைன் போதைப் பொருள் வில்லைகளை தனது உடலில் மறைத்து வைத்திருந்த கென்ய நாட்டு பிரஜை ஒருவரை சுங்க திணைக்களத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் இவர் கென்யாவில் இருந்து வருகை தந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது மேற்படி நபரை பரிசோதனை செய்த போது அவரது உடலில் இருந்து குறித்த வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த நபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# நீண்டகால கொவிட் அறிகுறிகளால் பாதிக்கப்படும் 10 வீத குழந்தைகள்!

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து 10 சதவீதக் குழந்தைகள் நீண்ட கொவிட் அறிகுறிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கை குழந்தைகள் நல மருத்துவக் கல்லூரியின் பேராசிரியர் குவானி லியனகே இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சுகாதார ஊக்குவிப்பு பணியகத்தில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

‘பெரியவர்களிடையே நீண்ட கால கொவிட் பாதிப்பு அதிகமாக இருந்தாலும், குழந்தைகளும் பாதிக்கப்படலாம்.

தற்போது, இலங்கையில் சரியான புள்ளிவிவரங்கள் இல்லை, எனினும், வைரஸ் தொற்றிலிருந்து மீண்ட பிறகு ஒரு குழந்தை காட்டக்கூடிய 200 இற்கும் மேற்பட்ட அறிகுறிகள் உள்ளன.

அவற்றில் இருமல், சுவாசிப்பதில் சிரமம், தலைவலி, சோம்பல் மற்றும் ஆர்வமின்மை ஆகியவை அடங்கும். மூன்றாவது அலையின் போது அதிக எண்ணிக்கையிலான குழந்தைகளும் கொவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் கூறினார்.

எனவே, வைரஸின் நீண்டகால அறிகுறிகளுடன் கூடிய குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம். அவர்கள் பங்கேற்பு இல்லாமை, வகுப்பு நடவடிக்கைகளில் குறைவான உற்சாகம் போன்றவற்றைக் கொண்டிருக்கலாம்.

பெற்றோர்களைப் போலவே, ஆசிரியர்களும் குழந்தைகள் மீது அவதானமாக இருக்க வேண்டும். இதையும் தவிர்ப்பதற்கான சிறந்த வழி, குழந்தை தகுதியுடையதாக இருந்தால், பெற்றோர் அவருக்கு அல்லது அவளுக்கு கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அத்துடன், வைரஸால் பாதிக்கப்படாமல் இருக்க சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வீட்டில் கொள்ளையிடச் சென்றவர் பொதுமக்களின் தாக்குதலில் சாவு

முல்லேரியாவில் வீடொன்றில் கொள்ளையிடச் சென்ற சந்தேகநபரொருவர் பிரதேசவாசிகளால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஒக்ரோபர் 31 ஆம் திகதி முல்லேரியா பொலிஸ் பிரிவில் மாளிகாகொடெல்ல பிரதேசத்திலுள்ள வீடொன்றில் அத்துமீறி நுழைந்த மூவர் வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்தி பொருள்கள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டுக் கொண்டிருந்தபோது வீட்டிலிருந்தவர்கள் கூச்சலிட்டுள்ளனர்.

கூச்சல் சத்தத்தைக் கேட்டு அயலவர்கள் குறித்த வீட்டுக்குள் நுழைந்து சந்தேகநபர்களை பிடித்துள்ளனர். இதன் போது மூவரில் இருவர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளமையோடு, எஞ்சிய ஒருவரை அயலவர்கள் தாக்கியுள்ளனர்.

இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளான சந்தேகநபர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2021இல் வெளியிடப்பெற்றது.